www.tamilarangam.net

தமிழீழ மக்கள் கட்சியின் அரசியல் ஏடு

# தமிழீழம்

மக்களுக்கே அனைத்து அதிகாரங்களும்

மார்கழி 1999 | இதழ் – 9

...இவுங்களுக்கு வோட்டுப் போட்டு நமக்கு கிடைச்சிருக்கிறது போதும். இனி ஒருத்தருக்கும் போடக் கூடாது...

-கொழும்புவாழ்தமிழ்ப்பெண்-

# சமகால அரசியலில் தேசிய ஒருமைப்பாட்டை நோக்கி...

சிங்கள ஆளுங்குழுமம் தனது இலக்கில் எப்போதும் தெளிவாக இருந்து வந்துள்ளது. இருந்து வருகின்றது. அரசு அதிகாரத்தை தன்வசப்படுத்திக்கொள்ள இரண்டு பிரதான சிங்கள கட்சிகளின் தலைமைத்துவமும் வெவ்வேறு வழி முறைகளை கையாண்டாலும், கொந்தளிக்கும் ஈழத்தமிழர் பிரச்சனைக்கு தீர்வு காண்பது என்பதை விட, அடக்குமுறையை புதிய வடிவங்களில் முன்னெடுத்து தமது ஆதிக்க நலன்களை அடைவதில் எப்போதும் குறியாக இருப்பார்கள் என்பதை இன்று வரையிலான நீண்ட வரலாறு தெட்டத்தெளிவாகி விட்டது.

மறுபுறம், அண்மைக்காலங்களில், தமிழ்தேசிய உணர்வு தீவிரமாக ஒருமுகப் பட்டு வருகின்றது. நீண்ட கால போராட்டமும், அதற்குக் கொடுக்க வேண்டியிருந்த விலைகளும், அடக்குமுறைகளும், இனஅழிப்பும் இவை அனைத்தையும் தகர்த்து எதிரிகளின் மீது நம்தேசம் அடைந்துள்ள வெற்றிகளும், அதிரித்துச் செல்லும் இந்த ஒருமித்த உணர்வை நாம் பெற்றுக்கொணடதற்கான குறிப்பிடத்தக்க காரணங்களாகும்.

கடந்த காலங்களில், இப்படியாக நாம் ஒற்றுமையை நிரூபித்த சந்தர்ப்பங்களில், தமிழ்தரப்பின் பல்வேறு தலைமைகளும் தமது சமூக, வர்க்க நலன்களில் இருந்து சில சலுகைகளை பெறுவதற்கு பேரம்பேசும் ஒன்றாகவே எமது ஒற்றுமையை பயன்படுத்திக்கொண்டன. மாறாக, தற்போது அடையப்பெற்றுள்ள தேசத்தின் இந்த ஒருமித்த கருத்தை எப்படி முற்றிலும் பரந்துபட்ட மக்களின் தேசிய நலன்களில் இருந்து பிரயோகிப்பது என்பதுதான் இன்றுள்ள முதன்மையான அக்கறையாக போராட்டத் தரப்புகளுக்கு இருக்க வேண்டும்.

சந்திரிகா அரசு, தான் இதுவரை மேற்கொண்டு வந்து அடக்குமுறைகளின் விளைவாக, ஈழத்தமிழர் ஒருவரேனும் தனக்கு வாக்களிக்கப் போவதில்லை என்பதை தெளிவாக தெரிந்து கொண்டுள்ளது. இதனால் முழுக்க முழுக்க சிங்கள இனவாதத்தின் பலத்தில் தனது வெற்றியை நிர்ணயிக்கும் விதத்தில் நிகழ்ச்சி நிரலை உருவாக்கி செயற்பட்டு வருகின்றது. இதற்கேற்ப செய்தித்தணிக்கை, தேர்தல் தில்லுமுல்லுகள், பாதுகாப்பு படைகள், அடியாட்கள், அரச தொடர்பூடகங்கள், ரணிலையும் புலிகளையும் இணைத்து பேசுதல், போன்ற பல வழிமுறைகளை பின்பற்றி வருகிறது. இம்முறை எப்படியும் வெற்றி பெற்று எம்மை அழித்தொழிக்கும் யுத்தத்தை நடாத்துவதில் சந்திரிக்கா தலைமை உறுதியாக செயற்படப் போவதற்கான கட்டியங்கள் இவை. சந்திரிகா அரசின் யுத்தமுனைவு பற்றியும், இதற்கான ஒதுக்கிய பட்ஜெட் பற்றியும் நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளோம்.

ரணில் வெற்றி பெற்றாலும் கூட இதே அரசியந்திரத்தையும் ஒதுக்கப்பட்ட நிதியையும் கொண்டு யுத்தத்தை தொடரப் போவதில் நமக்கு எந்த சந்தேகமும் கிடையாது. யூஎன்பி தலைமையானது நேற்று வரையிலும் தான் ஆற்றிய சிங்கள

(தொடர்ச்சி 07இல்)

## (மலைகத் தமிழரும்) சந்திரசேகரனும் சிங்கள அரசுத்தலைவர் தேர்தலும்:

நடைபெறப் போகும் தேர்தலில் தீர்மானகரமான சக்திகளாக மலையக தமிழர் உள்ளனர். இந்த தேர்தலில் மட்டுமல்ல பொதுத் தேர்தல்கள், மாகாண சபை தேர்தல்களிலும் கூட இவர்கள் தீர்மானகரமான சக்திகளாக இருந்துள்ளமை கடந்த காலத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, மலைகய தமிழரின் வாக்குகளை மொத்தமாக பெற்றுக் கொள்ள இதற்கு முன்னர் இதொக வையும் தொண்டமான் அவர்களையும் போட்டி போட்டுக் கொண்டு சிங்கள அரசுத்தலைமை பயன்படுத்திக்கொண்டது. கடைசியாக அமைக்கப்பட்ட பாரளுமன்றத்தை மலைய மக்க ளின் பிரதிநிதிகளில் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த சந்திரசேகரனின் ஒரு வாக்கு தீர்மானித்ததை அனைவரும் அறிவோம். பின்னர் சந்திரசேகரனுக்கு கிடைத் அவமானங்கள் பற்றி அவருக்கும் அவரை ஆதரித்த மக்களுக்கும் நன்கு தெரியும்.

மலையகத் தமிழரின் ஆதரவில் அமையும், இதே அரசுத்தலைமையின் ஆணையின் கீழ் வரும் அரசும் அதன் யந்திரங்களும் சம காலத்தில் மலையக மக்களின் அரசியல் பலத்தை சிதைக்கும் நோக்குடன் செயற்பட்டு பல்வேறு குடியேற்றத்திட்டங்கள் உட்பட திட்டமிட்ட நடவடிக்கைகள் மூலமாக, இம்மக்களின் தேசிய தனித்துவத்தை சிதைத்து, உதிரிகளாக்கி விட ஆண்டாண்டு காலமாக திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றன. இதற்கு எதிராக கிளர்ந்தெழுந்த மக்களும் இளைஞர் யுவதிகளும் பயங்கரவாத தடைச்சட்டங்களையும், அவசரகால சட்டங்களையும் கொண்டு கடுமையாக அடக்கப்பட்டது என்பது எமக்கும் பரிச்சியமான அனுபவங்கள்தான்!

தமது அன்றாட பிரச்சனைகளுக்கும் மோசமான தேசிய அடக்கு முறைக்கும் எதிராக, அதுவரை இருந்து வந்த தமது அரசியல் தலைமை காத்திரமாக எதனையும் செய்யவில்லை

(தொடர்ச்சி 8ம் பக்கத்தில்)

## மாணவர் எழுச்சி...

5லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழீழ மாணவர்களும் 15ஆயிரம் ஆசிரியர்களும் கறுப்புப் பட்டி அணிந்து தமது எதிர்ப்பை சிறிலங்கா அரசிற்கு வெளிப்படுத்தினர். அகதிகளாக மடு தேவாலயத்தில் இருந்த மக்கள் மீதான சிறிலங்காப் படைகளின் குண்டுத் தாக்குதலை எதிர்த்து, மாணவா களும் ஆசிரியர்களும் ஓரணி திரண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருத்தியிருக்கின்றனர். இது நமது தேசத்தின் சமூகப் பிரிவுகள் ஒவ்வொன்றும் தேசப் போராட்டத்தில் ஒன்று கலக்கும் நிகழ்வுப் போக்கை வெளிப்படுத்துவதாயுள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பத்திலிருந்து, போராட்டத்திற்கு வலுவூட்டும் பிரதான சமூகப் பிரிவாக மாணவர்கள் இருந்து வருகின்றனர். சிறிலங்கா அரசு தம்மீது கட்டவிழ்த்து விட்ட அடக்குமுறைகளையெல்லாம் தமிழ் மாணவர்களெனும் நிலையிலிருந்து நமது மாணவர் சமுதாயம் தொடர்ச்சியாக எதிர்கொண்டு வருகிறது. எனினும் நமது மாணவர்கள் தமது தேசத்தின் சுய கௌரவத்தையும் சுய மாண்பையும் உயர்த்திப் பிடிப்பதில் என்றும் சோர்வடைந்ததில்லை. சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம், தம்மாலான அனைத்து வழிமுறைகளினூடாகவும் எதிரிக்கெதிராக போராடி வருகின்றனர்.

விடுதலையை, ஜனநாயகத்தை முழுமையாக அனுபவிக்கப் விரும்பும் பிரிவினரான மாணவர்கள், தேசத்தின் அகவாழ்வில் போராட்டத் தரப்பினால் ஏற்படுத்தப்பட்ட ஜனநாயக மீறல்களையும் வீரமுடன் எதிர்த்துப் போராடினர். இதனால் போராட்டத் தரப்பினாலும் மாணவர்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டது. இந்த அடக்குமுறைகளையெல்லாம் எதிர் கொண்ட நிலையிலும் நமது மாணவர்கள் தேசத்தின் இறைமைக்காக மீள மீள ஒருங்கிணைகின்றனர். நமது தேசத்தின் எதிர் காலத்தை சுமந்து நிற்கும் மாணவர்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சூழலை, மாணவர் சமூகத்துடன் இணைந்து உருவாக்கவோம். மாணவர்களால் சுயமாக முன்னெடுக்கப்படும் போராட்டங்களை வளர்த்தெடுப்பதில் தேசம் தழுவிய ஒத்துழைப்பை வழங்குவோம். தேச விடுதலை என்பது ஒவ்வொரு சமூகப்பிரிவும் முன்னெடுக்கும் போராட்டங்களின் ஒருங்கிணைவிலிருந்தும் சமத்துவத்திலிருந்:தும்தான் பிறக்கிறது என்ற அடிப்படைய அரசியலில் நம்பிக்கை கொள்வோம். இதற்கான கட்டியங்களை போராட்டத் தலைமைகள் இப்போதிருந்தே தொடங்க வேண்டும். தமிழீழ மக்கள் கட்சியும் இதற்கான செயற்பாடுகளில் ஒன்றிணையும்!

**எமது இலட்சியம் சுதந்திர தமிழீழம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழ குடியரசும் முஸ்லீம் தேசமும்!

இப்பத்திரிகையின் 4ம் இதழில் பிரசுரிக்கப்பட்ட கட்சியின் அரசியல் திட்டத்தில் வடகிழக்கு பிரதேசங்களில் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் முஸ்லீம் மக்கள் பற்றிய எமது நிலைப்பாட்டினையும் முன்வைத்திருந்தோம். இது குறித்து நமது வாசகர்களிடமிருந்து சில கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

முஸ்லீம் மக்கள் தனியான அரசியல் சமூகம்தான். தமது அரசியல்தலைவிதியை தாமே நிர்ணயிக்கும் சுயநிர்ணய உரிமை கொண்டவர்கள்தான். ஆனாலும் தமிழீழ குடியரசு அமைக்கப்படும் போது, அவர்கள் பிரிந்து சென்று தனியரசு அமைப்பது என்பது, அல்லது சிறிலங்கா அரசுக் கட்டமைப்பின் கீழ் தனியான அரசியல் கட்டமைப்பாக வாழ்வது என்பது எப்படி நடைமுறைச் சாத்தியமாகும்? எனவே, தமிழ் மக்களுடன் இணைந்து வாழக்கூடிய ஒரு அரசியல் தீர்விற்கு அவர்கள் வருவதுதான் சாத்தியமாக கூடிய விடயம். ஆகவே, இப்படியான ஒரு ஏற்பாட்டிற்கு வரக்கூடிய முஸ்லீம் முற்போக்கு சக்திகளுடன் இணைந்து வேலைத்திட்டதிற்கு நாம் வருவது நல்லதல்லவா? என்பது போன்ற கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

இதற்கான பதில்களை நாம்தேட முன்பு, இப்பிரச்சனையுடன் தொடர்புடைய சில அடிப்படை விடயங்களை சுருக்கமாக பார்ப்போம்.

அமையப்போகும் தமிழீழ ஜனநாயக குடியரசிற்கும், தற்போதுள்ள வடக்கு கிழக்கு பிரதேசங்களில் வாழும் முஸ்லீம் மக்களுக்கும் அதாவது முஸ்லீம் தேசத்திற்கும் இடையிலான எதிர்கால உறவுகுறித்த நிலைப்பாட்டினை எமது கட்சி வந்தடைந்தற்கான அரசியல், வரலாற்று ஆய்வொன்றை எமது கோட்பாட்டு பத்திரிகையான உயிர்ப்பு சஞ்சிகையில் 1996 இல் வெளியிட்டிருந்தோம். இந்த ஆய்வை அடிப்படையாக கொண்டு எமது நிலைப் பாட்டை அரசியல்திட்டத்திலும், பத்திரிகை இதழ் 3 *முஸ்லீம் தேசம்* ஒரு கட்டுரையாகவும் வெளியிட்டிருந்தோம்.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் என தற்போது அழைக்கப்படும் பிரதேசங்கள் ஈழத்தமிழரின் பாரம்பரிய தாயகம் என்பது போல, அங்கு வாழும் முஸ்லீம் மக்களுக்கும் இது தாயகமாகும் என்பதை இவற்றில் பார்த்திருந்தோம்.

தேசம் என்பது குறிப்பிட்ட எல்லைப் பரப்புகளை கொண்ட, பிரதேசம் அல்ல. மாறாக, குறிப்பிட்ட அரசியல் இலக்கு நோக்கி ஒன்றுபட்ட, தம்மை தனித்துவமான சமூகமாக இனங்காண்கின்ற மக்கள் கூட்டமாகும் என்பது பிரதான அம்சமா கின்றது. ஸ்திரமான பொருளாதாரம், மொழி, தொடர்ச்சியான நிலப்பரப்பு போன்ற நிபந்தனைகளை பூர்த்தி செய்தால்தான், அது தேசமாக முடியும் என்ற கடந்த கால வரைமுறைகள் நவீன அரசியல் சமூக ங்களின் வரலாற்றினால் காலாவாதி யாக்கப்பட்டுள்ளன. மேலும், தேசம் மற்றும் சுயநிர்ணய உரிமை என்பதை நாம் புவியியல் எல்லைகளுக்குள், நிலத்தொடர்ச்சி என்பதாகவும் குறுக்குவது தேவையில்லை என்பதையெல்லாம் நாம் பார்த்திருந்தோம்.

ஈழத்தமிழர்களை போலவே, தற்போதைய வடக்கு கிழக்கு பிரதேசங்களில் பாரம்பரியமாக வாழும் முஸ்லீம மக்களும் ஒரு தனியான தேசமாகும். எனவே, தமது அரசியல் தலைவிதியை தாமே நிர்ண யிக்கும் சுயநிர்ணய உரிமை என்பது அவர்களின் பிரிக்க முடியாத அடிப்படை உரிமையாகி விடுகின்றது.

அடுத்து முக்கிய அம்சம், எமக்கென தனியான தேசஅரசைக் கொண்டிருப்பது பற்றியதாகும். ஈழத்தமிழருக்கு என முற்றிலும் இறைமை கொண்ட தனியான தேசஅரசு எதுவுமின்றி வெறுமனே தாயகம் பற்றி பேசிக்கொண்டிருப்பதில், அது எவ்வளவு தான் விரிந்த நிலப்பரப்பாக இருந்தாலும், அரசியல் ரீதியில் எவ்வித அர்த்தமும் கிடையாது. தேசியம் என்பதில் தாயகம் என்பது ஒரு பகுதி அம்சம் மாத்திரமே! எனவே பிரதேசம், மொழி, கலாச்சாரம் என்பவற்றிற்கு மேலாக, தனியான தேச அரசை நமது தேசம் கொண்டிருக்க வேண்டும் என்ற கருத் தாக்கம் மிகவும் அடிப்படையானதாகும்.

இவ்வாறான தனியான ஜனநாயக குடியரசொன்றை ஈழத்தமிழராகிய நாம் கொண்டிருப்போம் எனின், தமிழீழம் தனிநாடு என்ற ஆள்புல எல்லையானது, தற்போ துள்ள வடக்கு கிழக்கு பிரதேசங்களை மட்டும் உள்ளடக்கியதாக அவசியம் அமைய வேண்டும் என்றில்லை. அது தெற்கே குமணைக்கு சற்று அப்பாலும், வடக்கே புத்தளம் வரையிலும் விரிவ டையலாம். புத்தளம் வாழ் தமிழ் மக்கள் ஏன், முஸ்லீம் மக்களும் கூட, தமக்கு சிறிலங்கா இனவாத அரசின் கீழ் அடக்குமுறை தீவிரமாக உள்ளது. தமிழீழ ஜனநாயக குடியரசில் தமக்கு அரசியல், ஜனநாயக உரிமைகள் உத்தரவாதப்படுத்தப்படும் என உணருவார்கள் எனின் குறிப்பாக, தாம் சமத்துமாக கௌரவிக்கப்படுவோம் என உணருவார்கள் எனின், அப்படிப்பட்ட நம்பிக்கையை நமது சுதந்திரக் குடியரசு ஏற்படுத்தும் எனின், அவர்களையும அவர்களின் வாழிடத்தையும் உள்ளடக் கியதாக தமிழீழ குடியரசின் ஆள்புல எல்லையை நாம் அம்மக்களின் பூரண விருப்புடன் வகுத்துக்கொள்ள முடியும்.

உண்மையில் இப்பிரதேசங்களில் வாழும் சிறிலங்கா அரசினால் அடக்கப்பட்டு வரும் மற்றும் விளிம்புநிலை சிங்கள மக்கள் கூட, தாம் தமிழீழ ஜனநாயக குடியரசில் சமத்துவமாக நடத்தப்படுவோம் என நம்புகின்ற விதத்தில் நமது நடைமுறைகள் அமையும் எனின் அவர்கள் கூட நமது குடியரசின் பிரஜைகளாக இருக்க சொந்த விருப்புடன் முன்வருவர்.

மறுபுறம், தமிழீழ குடியரசின் ஆள்புல எல்லையானது, மேற்கே கந்தளாயின் ஒருபகுதி தவிர்ந்ததாக, அம்பாறை தொகுதி மற்றும் அக்கரைப்பற்று, சம்மாந்துறை . . . போன்ற பகுதிகளை நீக்கியதாகவும் அமையலாம். போராட்டத்தின் அன்றைய பலம் பலவீனமான தன்மை, சக தேச மக்களுடான எமது உறவு மற்றும் விட்டுக் கொடுப்புகள் போன்ற பல அக புற காரணி களின் அடிப்படைகளில் இது அமையலாம்.

*முஸ்லீம் மக்களுடனான எதிர்கால உறவு பற்றிய எமது சிந்தனையில் அடிப்படையில் தவறு எங்குள்ளது என்றால், தற்போது இரண்டு தேசங்களுக்கு இடையிலும் நிலவும் தப்பெண்ணங்கள், ஆழப் படுத்தப்பட்டுள்ள சந்தேகங்களின் அடித் தளத்தில் நின்று கொண்டு நாம் தீர்வுகளை தேடுகின்றோம். கடந்த காலங்களில் இருந்து இன்றுவரை தமிழ் தரப்பினால் முஸ்லீம் மக்களுக்கு இழைக்கப்பட்ட பாரதூரமான தவறுகளை ஒப்புக் கொள்ளாமாலும், சமத்துமவற்ற பார்வை களைக் கொண்டும் நாம் தீர்வுகளை தேடுகின்றோம்.*

கால் நூற்றாண்டுக்கு முன்னர் மகாவலி நீரையும், மின்சாரத்தையும், காட்டி ஈழம் சாத்தியமில்லை என சிங்கள சோவினிஸ்டுகள் அன்று எம்மை பயப் பிராந்தி ஊட்டிது போல, நாமும் பல்வேறு அடக்குமுறை அனுபவங்களையும் சுமந்தவர்களாக உள்ள முஸ்லீம் மக்களை நிலத்தொடர்ச்சியில்லை என அச்சுறுத் துவதோ நிபந்தனையிடுவதோ கோழைத் தனமானது. இன்று வரையிலும் முஸ்லீம் மக்கள் தனியரசு கோரியதில்லை. அவர்களது அரசியல் கோரிக்கை இன்னமும் அந்த வளர்ச்சிக்கட்டத்தை அடையவில்லை என்பதோடு அதற்கான தேவை அவர்களுக்கு தற்போதைய சூழலில் அவசியம் எனப்படவில்லை. ஒரு அரசியல்சமூகம் உண்மையில் தனது அன்றைய தேவைக்கான கோரிக்கை எதுவென தானே தீர்மானிக்கும். இந்த கோரிக்கையை பல்வேறு அக புற காரணிகளே தீர்மானிக்கின்றன. நமது தேசத்துடன் ஜனநாயக பூர்வமானதும் ஆரோக்கியமானதுமான உறவிற்கு வருவதற்கான வாய்ப்புகள் முஸ்லீம் தேசத்திற்கு திறந்திருக்கும் எனின், அந்த தேசம் ஏன் அடக்குமுறைப்பிரயோகித்துக் கொண்டிருக்கும் சிறிலங்கா அரசுடன் ஒரு அரசியல்ஏற்பாட்டிற்கு செல்லத்தயாராகும்? எனவே பிரச்சினைக்கான அடிப்படைத் தீர்வானது நமது பக்கத்தில்தான் உள்ளது. முஸ்லீம் தேசத்தினை சமத்துவமாக மதித்து அவர்களது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் தலைமையுடன் பேசி ஒரு நியாயமான தீர்வினை எட்டுவதுடன், உண்மையான நம்பிக்கையை கட்டி யெழுப்புவதும் எமது பக்கப்பொறுப்புக்களில் சிலவாகும். எம்மைப் பொறுத்துவரையில் சிங்கள தேசம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோமோ, அதைவிட அதிக பெருந்தன்மையுடன் நாம் முஸ்லீம் தேசத்துடன் நடந்து கொள்ள வேண்டும். இவ்விடயத்தில், தற்போது நடைமுறையில் நாம் எங்கே நிற்கின்றோம் எனப்பார்ப்போம்.

விடுதலைப்புலிகளால் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடக்கு முஸ்லீம் மக்கள் தமது பாரம்பரிய வாழிடங்களுக்கு செல்ல விரும்புகின்றனர். உண்மையில், இவ்வளவு காலத்திற்குள் நஸ்ட ஈட்டுடன் கூடிய பாதுகாப்பு உத்தரவாதம் அவர்களுக்கு தரப்பட்டிருக்க வேண்டும். மாறாக, விடுதலைப்புலிகளின் வாதமும் நிபந் தனைகளும் எப்படி வரட்டுத்தனமாக உள்ளதெனில், தமிழரின் பிரதேசங்களை இராணுவம் ஆக்கிரமித்துள்ளதால், அம்மக்கள் இடம்பெயாந்து முஸ்லீம்களின் இடங்களில வசிக்கின்றனர். எனவே தமிழ் மக்கள் தமது வழமையான வாழிடங் களுக்கு திரும்பும்போது முஸ்லீம்மக்கள் திரும்பி வர முடியும் என்பதாக உள்ளது.

மேலும், முஸ்லீம் மக்களுடனான எதிர்கால உறவுபற்றிய எமது சிந்தனையில் அடிப்படையில் தவறு எங்குள்ளது என்றால், தற்போது இரண்டு தேசங்களுக்கு இடை யிலும் நிலவும் தப்பெண்ணங்கள், ஆழப் படுத்தப்பட்டுள்ள சந்தேகங்களின் அடித் தளத்தில் நின்று கொண்டு நாம் தீர்வுகளை தேடுகின்றோம். கடந்த காலங்களில் இருந்து இன்றுவரை தமிழ் தரப்பினால் முஸ்லீம் மக்களுக்கு இழைக்கப்பட்ட பாரதூரமான தவறுகளை ஒப்புக் கொள்ளாமாலும், சமத்துமவற்ற பார்வை களைக் கொண்டும் நாம் தீர்வுகளை தேடுகின்றோம். சில சமயம், சிங்கள அரசு முன்வைக்கும் கேடுகெட்ட தீர்வுத் திட்டங்களில் நின்று கொண்டு கூட நாம் விவாதிக்க விளைகின்றோம். வடக்கு கிழக்கில் முஸ்லீம்களுக்கு என ஒரு சுயாட்சி மாகாணம் சாத்தியம் இல்லை என தென் கிழக்கு மாகாணக்கோரிக்கைக்கு முஸ்லீம் கொங்கிரஸ் பின்வாங்குவது கூட இந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வகைப்பட்டதே. மேலும், முஸ்லீம் சமூகத்திலுள்ள ஒருசில பிற்போக்கு சகதிகளின் தவறுகளை ஒட்டுமொத்தமாக முஸ்லீம் தேசத்தின் மீது ஏற்றித்தவறாக பார்க்கும் சித்தாந்த ஆதிக்கத்தின் பிடியில் இருந்து கொண்டு இன்னமும் சிந்திக்கின்றோம். இந்த விதமான தவறுகளில் இருந்து அவசியம், நாம் விடுபட வேண்டும்.

தமிழீழ ஜனநாயக குடியரசின் அரசியல்யாப்பும் அதன் நடைமுறைகளும் எவ்வளவுக்கு முஸ்லீம் மக்களை ஜனநாயகபூர்வமாகவும் சமத்துவமாகவும் மதித்து நடக்கின்றதோ அந்தளவுக்கு தமிழ் தேசத்துடனான உறவு, பொதுப்பாரம்பரியப் பிரதேசத்தில் அதன் இருப்பும் தமிழ் தேசத்துடன் நெருங்கியதாக இருக்கும். நமது தரப்பில் ஆதிக்கம் எவ்வளவு அதிகமாக உள்ளதோ அந்தளவிற்கு முஸ்லீம் தேசத்தின் தனியான அரசியல் கோரிக்கைகளும் உயர்ந்த பட்சமானதாக இருக்கும் என்பதையும் நாம் புரிந்து கொள்வோம்.

இதற்கும் மேல், முஸ்லீம் தேசம் தனியாக பிரிந்து சென்று அரசு அமைக்கப் போகின்றது எனின், அது அவர்களின் சுயநிர்ணயத்தின்பாற்பட்ட உரிமை என்ற அடிப்படையில் சமத்துவமாக அமர்ந்து ஒரு ஆரோக்கியமான அரசியல் ஏற்பாட்டிற்கு வரலாம். இப்படியான ஜனநாயக முறைமைக்குள் தீர்க்க முடியும் எனின் அப்போது காரைதீவும் காத்தான்குடியும் பெரும் சர்ச்சைக்குரிய விடயங்கள் அல்ல. ஒன்று, இந்த பிரதேசங்கள் அப்படியே அந்தந்தக் குடியரசில் நிலைக்க முடியும் அல்லது நஸ்ட ஈடுகளுடன் இடங்களை மாற்றிக்கொள்ளவும் முடியும். மாறாக, சுயநிர்ணய உரிமை உண்டு, ஆனால் பிரிந்து செல்லக் கூடாது, என ஜேவிபி எமக்கு வைப்பது போல நிபந்தனையை நாமும் வைப்பதானது மிகவும் அபத்தமானது.

முஸ்லீம் தேசத்தின் மற்றுமொரு தெரிவாக சிங்கள அரசுடன் ஒரு ஏற்பாட்டுக்கு வருவதாக இருப்பின் அதுகுறித்தும் நாம் அதிர்ச்சியடைய தேவையில்லை. ஜனநாயக தன்மை மிக்க எமது குடியரசுடன் ஒரு அரசியல் ஏற்பாட்டிற்கு வருவதற்கு பதிலாக ஒரு சமூகம் அடக்குமுறை அரசுடன் இணைந்து கொள்வதற்கான சாத்தியம் மிகவும் அரிது. அப்படித்தான் வந்தாலும் நாம் ஈழத்தமிழ் தேசத்தின் நலன்கள் தேசிய அபிலாசைகளுக்கு பாதகம் இன்றிய ஒரு தீர்வினை எட்டுவதை நோக்கி நாம் முயற்சிப்பதே நியாயமானதாகும்.

இதற்கு மேல் விடயங்களின் நுணுக்கமான தன்மையை அன்றைய சூழலில்தான் தீர்க்க முடியும். இப்படியான நிலைமையில் ஒன்றை மட்டும் நாம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். நமது தேசத்தின் அடிப்படை நலன்கள் அபிலாசைகளை விலையாக கொடுக்கவும் முடியாது, அதேபோன்று மற்றொரு தேசத்தின் அடிப்படை தேசிய அபிலாசைகளையும், வாழ்வுரிமைகளையும் நாம் பறிக்கவும் கூடாது.

# நினைவுகளின் அரசியல் !

குறிப்பிட்ட மக்கள் திரளை ஒரே தேசமாக இணைப்பதில், தமக் கேற்பட்ட அனுபவங்கள் குறித்த அவர்களின் உணர்ச்சிமிக்க நினைவுகள் முக்கிய பாத்திரம் வகிக்கின்றன. அந்நிய அரசினால் அல்லது அரசுகளினால், ஆக்கிரமிப்பு படைகளினால் தமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள், அவமானங்கள், தமக்கேற்படுத்தப் பட்ட ஈடு செய்ய முடியாத இழப்புகள், துயரங்கள், கூட்டாக அடைந்த சாதனைகள், வெற்றிகள். . . . குறித்த அழியா நினைவுகள், அம்மக்களை இறுகப் பிணைக்கின்ற வலிமையான இழைகளாகி விடுகின்றன. இன்னமும், ஈரம் வற்றாதவையாய், தொட்டுணரக் கூடிய நெருக்கம் கொண்டவையாய், ஆழ வேரூன்றியவையாய் ஒரு தேசத்தின் மத்தியில் தொடர்ந்து வாழ்கின்ற இத்தகைய நினைவுகள், சக்தி மிக்க ஆயுதங்களை விட, கூடுதல் வலிமையை அத்தேசத்திற்கு வழங்குகின்றன.

கடந்த அரைநூற்றாண்டு காலமாக எமக்கேற்பட்டிருக்கின்ற அனுபவங்கள், எமது தேசிய இயக்கத்தில் மிகுந்த முக்கியத்துவம் பெற்றவை. சிறிலங்கா அரசினாலும், அதன் ஆக்கிரமிப்பு படைகளினாலும் எமக்கேற்படுத்தப்பட்ட, ஏற்படுத்தப்பட்டு வருகின்ற அவமானங்களும், அழிவுகளும், துயரங்களும் எம்மை வலிமைப் படுத்தியுள்ளன: எமது தாயகத்தை வீரத்தின் விளைநிலமாக்கியுள்ளன: எம்மை ஒரே தேசமாக பிணைத்திருக்கின்றன. எனினும், நாம் பின்வரும் கேள்விகளுக்கான பதிலை திறந்த மனத்துடன் ஆராய வேண்டியவர்களாக உள்ளோம்.

சிறிலங்கா அரசினாலும், அதன் ஆக்கிரமிப்பு படைகளினாலும் எமக்கேற்படுத்தப்பட்டு வந்திருக்கின்ற அவமானங்கள், அழிவுகள், கொடுமைகள், துயரங்கள் குறித்த நினைவுகளை நாம் கூட்டாக ஞாபகமூட்டுகின்றோமா? இந்நினைவுகளை எமது சந்ததிகளுக்கு கையளிக்க கூடிய முறைமைகளை உருவாக்கியிருக்கின்றோமா?

நமது தேசத்தின் மூன்றில் ஒரு பங்கினர் புலம்பெயர்ந்து வாழ்கின்ற நிலையில் இத்தகைய அனுபவங்களை சந்தித்திராத புதிய தலைமுறையொன்று எம்மத்தியில் ஏற்கனவே உருவாகியிருக்கின்ற நிலையில், எமது தேசிய அடையாளங்கள், சிறிலங்கா அரசினால் திட்டமிட்டு அழிக்கப்பட்டும், திரிக்கப்பட்டும் வருகின்ற நிலையில், இக்கேள்விகள் முக்கியத்துவம் பெறுகின்றன. புலம்பெயர்ந்துள்ள நமது மக்கள் மத்தியில் மாத்திரமன்றி, தமிழீழத்தில், சிறிலங்கா படையின் ஆக்கிரமிப்பின் கீழ் வாழ்கின்ற மக்கள் மத்தியிலும் கூட, இந்த நினைவுகள் மறக்கப்பட்டு வருகின்றன என்பதை எம்மால் உணர முடிகின்றதா?

எமக்கேற்பட்டிருக்கின்ற அனுபவங்களை, நினைவுகளாக பேணுவதிலும் இலக்கிய பிரதிகளாகவோ, கலைவடிவங்களாகவோ, கணணி வலை போன்ற நவீன ஊடகங்களைப் பயன்படுத்தியோ அல்லது எமக்கிடையிலான ஒன்றுகூடல், கலந்துரையாடல் போன்ற சமூக நிகழ்வுகளின் மூலமாகவோ வாக்கத்திலும் அரசியல் வாழ்விலும் வலிமையான தாக்கத்தை நிகழ்த்தியிருக்கின்றது. இதே போன்று, அமெரிக்க செவ்விந்தியர் மத்தியிலும், அவுஸ்திரேலியாவின் பூர்வீக குடிகள் மத்தியிலும் தமது வரலாறு குறித்த நினைவுகள மீட்டெடுக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய நினைவுகளின் மீளுருவாக்கமானது, அம்மக்களின் சமூக, அரசியல், வாழ்வில் பெரும் பாய்ச்சலையே நிகழ்த்தி வருகின்றது. இவ்வாறு ஒரு தேசம் வரலாற்றுபூர்வமாக தான் வெற்றி கொண்ட நினைவுகளுக்கும் சமூகத்தின் இருப்பிற்கும் இடையிலான நெருங்கிய உறவை புரிந்து கொள்வோமாயின், எமது நினைவுகள் கொண்டிருக்கின்ற அரசியல் முக்கியத்துவத்தை எம்மால் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியும் .

எனவே, எமது தேசத்தின் பொதுவான துயரங்களினதும், சாதனைகளினதும், வெற்றிகளின

> எனவே, எமது தேசத்தின் பொதுவான துயரங்களினதும், சாதனைகளினதும், வெற்றிகளினதும் வரலாற்றை - வரலாற்று சம்பவங்களை தொகுத்து தலை முறையாக்கம் செய்வோம். எமக் கேற்படுத்தப்பட்டுள்ள அவமானங்கள், இழிபடுத்தல்கள், கொடுமைகள் துயரங்கள் அனைத்தையும் எம்மை தழுவி, இணைக்கின்ற வலிமைமிக்க நினைவுகளாக உருமாற்றுவோம்.

கூட்டாக நினைவுபடுத்துவதிலும் நமது சந்ததிகளுக்கு கையளிப்பதிலும் நாம் பிரக்ஞைபூர்வமாக முயற்சிக்கவில்லை என்பதை கவனத்தில் கொள்வோம்.

அமெரிக்காவிற்கும், ஐரோப்பாவிற்கும் அடிமைகளாக கொண்டு வரப்பட்ட ஆபிரக்க கறுப்பின மக்கள், தமது பூர்வீகத்தையும், அனுபவங்களையும் வாய்மொழி கதைகளாக திரும்ப திரும்ப சொல்லி வந்ததன் மூலம், அவற்றை உயிருள்ள நினைவுகளாக பேணியும், நூற்றாண்டுகளாக தமது சந்ததிக்கு கையளித்தும் வந்திருக்கின்றார்கள். இது, இந் நாடுகளில் வாழ்கின்ற கறுப்பின மக்களின் ஐக்கியத்திலும், சமூக அடையாளத்திலும், சமூக உரு தும் வரலாற்றை - வரலாற்று சம்பவங்களை தொகுத்து தலைமுறையாக்கம் செய்வோம். எமக் கேற்படுத்தப்பட்டுள்ள அவமானங்கள், இழிபடுத்தல்கள், கொடுமைகள் துயரங்கள் அனைத்தையும் எம்மை தழுவி, இணைக்கின்ற வலிமைமிக்க நினைவுகளாக உருமாற்றுவோம் ! எம்மிடையே நிலவுகின்ற ஆதிக்க மற்றும் அடக்குமுறை மரபுகளை ஒழித்து, எமது நினைவுகளை தேசிய நினைவுகளாக பொதுமைப் படுத்துவோம்.! எம்மத்தியில் படிந்து, திரளும் நினைவுகள், நமது பெருமைக்குரிய வரலாறாக அமையட்டும்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பாலியல் தொழில் யார் குற்றவாளி ?

பொருளாதாரக் காரணங்களுக்காக பெண்கள் தமது பாலியல் ஆற்றலை விற்பது நமது சமூகத்தில் "விபச்சாரம்" எனும் சொல்லால் குறிக்கப்படுகிறது. "விபச்சாரம்" எனும் சொல்லானது பெண்ணை இழிவுபடுத்தலின் எல்லைக்கே தள்ளிவிடும் ஆணாதிக்க சித்தாந்தங்களுடன் பிணைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் அறிவோம். முதலில் நாம் "விபச்சாரம்" எனும் சொல்லை கேள்விக்குள்ளாக்குவோம். பாலியல் தொழில் எனும் சொல்லை பிரதியீடு செய்வோம். இச்சொல்லானது பெண்கள் தமது பாலியல் ஆற்றலை விற்கும் நடவடிக்கைக்கு நேர்மறை அர்த்தத்தை தருவதாகும்.

நமது சமூகத்தைப் பொருத்தவரையில் பாலியல் தொழிலானது சமூக நல்லொழுக்கத்தை சிதைத்திடும், சீர்கேடான சமூக வாழ்வை உருவாக்கும் நடவடிக்கையாக சித்தரிக்கப்பட்டு வருகிறது. அதிலும் இந்நடவடிக்கையானது பெண்ணின் ஒழுக்கநெறியுடன் மாத்திரம் தொடர்புபடுத்திப் பார்க்கப்படுவதால் சமூக சீர்கேட்டிற்குக் காரணமாக பெண்ணை மிக எளிதாக தூற்றிவிட்டுப் போகும் போக்கே தொடர்கிறது.

பெண் விடுதலையை நேசிக்கும், அதற்காக செயற்படும் பெண்களும் ஆண்களுமான நாம் பெண்கள் தமது பாலியல் ஆற்றலை விற்பது தொடர்பாக எத்தகையக் கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளோம் என்பதும் இங்கு பிரதானமானது. பாலியல் தொழிலை அருவருக்கத்தக்க ஒன்றாக, உடனடியாக இரும்புச் சட்டத்தால் தடுத்து நிறுத்தப்பட வேண்டியதாக பார்க்கிறோமா? பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்களுக்கு "நல்லொழுக்கப் போதனைகள்" செய்யப் போகிறோமா? அல்லது எந்த நிலையில், என்ன தேவைகளுக்காக பெண்கள் தமது பாலியல் ஆற்றலை விற்க நேர்கிறது என்பதை புரிந்துகொள்வதனூடாக இது பற்றிய சரியான முடிவுகளை எட்ட முயல்கிறோமா என்பதே?

பின்வரும் நிகழ்வுகளை நமது உரையாடலுக்கான எளிமையான உதாரணங்களாக எடுத்துக் கொள்வோம்.

- இரண்டாவது ஈழப்போர் தொடங்கியதும், போக்குவரத்துத் தடைபட்டதுடன் பொருளாதாரத் தடையும் நம்மீது திணிக்கப்படுகிறது. உணவுத் தட்டுப்பாடு உச்சத்தில் நிலவியது. வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்த மக்களுக்கு கஞ்சியும் பனம்பழமும் தான் ஆதாரம். (கணவனைப் பிரிந்த) குடும்பப் போஷகரான இரண்டு பிள்ளைகளின் தாய் அரிசிவாங்குவதற்காக பத்து ரூபாவுக்கு தனது பாலியல் ஆற்றலை விற்க நேர்கிறது.

- மூன்று பிள்ளைகள் மற்றும் வயோதிபத் தாயின் பசியைப் போக்குவதற்காக கூலித் தொழில் செய்யும் குடும்பப் போஷகரான பெண் (கணவன் இராணுவத்தால் சுடப்பட்டார்) தான் உழைப்புச் சக்தியை விற்கும் அதே விவசாயிக்கு தனது பாலியல் ஆற்றலை மேலதிக மரக்கறிகளையும் நெல்லையும் பெற்றுக்கொள்வதற்காக விற்கிறார்.

இவ்விரு உதாரணங்களும் நமது சகோதரிகள் பாலியல் தொழிலில் ஈடுபடுவதற்கான சமூகக் காரணங்களை நன்கு விளக்குவதற்கு போதுமானவையாகும்.

பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண் தனது உடலை - பாலியல் ஆற்றலை மூலதனமாகக் கொண்டுள்ளார். மானுட விழுமியங்களின் அடிப்படையில் மனித உடலும், மனித உணர்வுகளின் வெளிப்பாடான பாலியல் ஆற்றலும் விலை நிர்ணயிக்கப்பட முடியாதவை. ஆனால் இங்கோ மிகவும் அற்பத்தனமான முறையில் பெண்ணின் பாலியல் ஆற்றலுக்கு விலை நிர்ணயிக்கப்படுவதன் மூலம் பெண் எனும் மானுட ஜீவி சுரண்டல்களிலேயே மிகவும் மோசமான சுரண்டலுக்கு உள்ளாகிறாள். அத்துடன் பெண்ணின் பாலியல் ஆற்றலை நுகர் பண்டமாக்கியிருப்பதும், பெண்ணின் சுயகௌரவத்தை சிதைப்பதும் பாலியல் தொழிலின் வெறுக்கத்தக்க அம்சமாயுள்ளது.

பாலியல் தொழிலில் பெண்கள் ஈடுபடுவதற்கான சமூகக் காரணங்கள் நிலவும் வரையில் இத்தொழில் நடைபெறத்தான் செய்யும். இத்தொழிலை வெறுத்தொதுக்குவதும் இரும்புச் சட்டங்களினால் கட்டுப்படுத்துவதன் மூலம் தடுத்து நிறுத்த முயல்வதும் சமூகத்தினால் பாதிப்பின் எல்லைக்கேத் தள்ளப்பட்டிருக்கும் பெண்களை நாமும் துன்புறுத்துவதாகவே அமையும்.

பிலிப்பீன்ஸ், இந்தோனேசியா போன்ற, பாலியல் தொழில் மிகவும் நிறுவனமயப்படுத்தப்பட்டதுவும் அந்நிய செலாவணியை ஈட்டித் தரும் முக்கிய தொழில்களிலொன்றாகவும் நடைபெறும் நாடுகளில் பெண் பாலியல் தொழிலாளர்கள் தமது தொழில் உரிமை மற்றும் சுகாதார உரிமைகளுக்காக அமைப்பாகிப் போராடி வருகின்றனர். அத்துடன் இவ்வுரிமைகள் அவர்களின் ஜனநாயக உரிமைகளாக சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டவை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

> எனவே, எமது தேசத்தின் பொதுவான துயரங்களினதும், சாதனைகளினதும், வெற்றிகளின தும் வரலாற்றை – வரலாற்று சம்பவங்களை தொகுத்து தலை முறையாக்கம் செய்வோம். எமக் கேற்படுத்தப்பட்டுள்ள அவமானங்கள், இழிபடுத்தல்கள், கொடுமைகள் துயரங்கள் அனைத்தையும் எம்மை தழுவி, இணைக்கின்ற வலிமைமிக்க நினைவுகளாக உருமாற்றுவோம்.

கடந்த காலத்தில் தமிழ்ப் போராட்ட அமைப்புகள் பாலியல் தொழிலில் ஈடுபட்டார்கள் எனும் காரணத்திற்காகவே பெண்களுக்கு மரண தண்டனை வழங்கிய சம்பவங்கள் பலதை நாம் அறிவோம். பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்கள் சமூகத்தை சீரழிக்கிறார்கள் எனும் பிழையான சமூக உணர்விற்கு தம்மளவில் பலியாகிப் போயிருந்த தமிழ்ப் போராட்ட அமைப்புகள் குற்றமற்ற பெண்களின் இரத்தத்தால் தமது கரங்களை கறைப்படுத்திக் கொண்டன. இப்பிழையான சிந்தனை இன்னும் நமது போராட்ட சூழலில் நிலவியே வருகிறது.

யுத்தத்தின் மோசமான பொருளாதாரப் பாதிப்புகள் காரணமாக பாலியல் தொழிலானது நமது தேசத்தில் அதிகரித்து வருவது குறிப்பிடத் தக்கது. வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள் மாத்திரமல்லாது நடுத்தரப் பிரிவுப் பெண்கள் கூட பாலியல் தொழிலை நோக்கித் தள்ளப்படுகின்றனர். குறிப்பாக, எல்லைப்புறக் கிராமங் களிலும், இராணுவக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட பிரதேசங்களிலும் வாழும் பெண்கள் தமது பாதுகாப்பு மற்றும் பொருளாதாரக் காரணங்களுக்காக சிங்கள இராணுவத்தினருடன் சேர்ந்து வாழ்வதும் பாலியல் தொழிலில் ஈடுபடுவதும் கூட நடைபெறுகிறது.

பாலியல் தொழில் தொடர்பாக, நமது கவனமெல்லாம் பெண்களின் பாலியல் ஆற்றல் சுரண்டப்படுவதை, பெண்களின் உடல் துன்புறுத்தலுக் குள்ளாவதை தடுத்து நிறுத்துவதையே அடிப்படையாய்க் கொண்டிருக்க வேண்டும். அவ்வகையில் நீண்ட காலத்தில் பாலியல் தொழிலை இல்லாது செய்யும் நோக்குடன் பெண்களது பொருளாதார வாழ்வில் மாற்றங் களை ஏற்படுத்துவதிலும் பாலியல் தொடர்பாக ஆரோக்கியமான சமூக மனோபாவத்தைக் கட்டியெழுப்புவதிலும் உணர்வு பூர்வமாய்க் கவனத்தைக் குவிக்க வேண்டும்.

உடலும் ஆன்மாவும் ஒன்றிணைந்த நிலையிலேயே மனிதர்கள் தமது வாழ்வின் அடையாளத்தைப் பெறுகின்றனர். பாலியல் தொழிலானது மனித உடலுடன் பிணைந்த ஆன்மாவை உடலிலிருந்தும் துண்டாடி, வெறுமனே சதைக்குவியலை மாத்திரம் முதன்மைப்படுத்தும் நடவடிக்கையாயுள்ளது. அவ்வகையில் பாலியல் தொழிலானது பெண்களின் மீது சமூகத்தால் திணிக்கப்பட்டிருக்கும் மிக மோசமான மனிதத் தன்மையற்ற நடவடிக்கையாகும். பாலியல் தொழில் இல்லாதொழியும் பொழுதுதான் பெண்களின் விடுதலை என்பதும் முழுமைபெறும். இதன் மறுபுறம், மனித குலம் உயர் மானுட விழுமியங்களை நோக்கி வளர்வதும் சாத்தியப்படும்.

www.tamilarangam.net

# சிங்கள தேசம் !

> எனவே, எமது தேசத்தின் பொதுவான துயரங்களினதும், சாதனைகளினதும், வெற்றிகளினதும் வரலாற்றை - வரலாற்றுசம்பவங்களை தொகுத்து தலைமுறையாக்கம் செய்வோம். எமக் கேற்படுத்தப்பட்டுள்ள அவமானங்கள், இழிபடுத்தல்கள், கொடுமைகள் துயரங்கள் அனைத்தையும் எம்மை தழுவி, இணைக்கின்ற வலிமைமிக்க நினைவுகளாக உருமாற்றுவோம்.

இருபதாம் நூற்றாண்டிற்குரிய தனிக் குறிப்பான பண்புகளில், புதிய தேசங்களின் தொடர்ச்சியான உருவாக்கம் என்பது சிறப்பான முக்கியத்துவம் பெறுகின்றது. இனத் தனித்துவங்களும், கலாசாரத் தனித்துவங்களும் கொண்ட நூற்றுக்கணக்கான தேசங்கள், தமது சொந்த அரசுகளின் கீழ், தாம் தேர்ந்தெடுத்த பாதையில், சுதந்திரமாக இயங்குவதை உறுதிப்படுத்தியுள்ள சகாப்தமாக இந்த நூற்றாண்டு அமைந்திருக்கின்றது. ஆதிக்க அரசுகளின் அடக்குமுறையின் கீழ், மக்களின் தனித்துவங்களும் உரிமைகளும் மறுக்கப்பட்டிருந்த நிலை அகற்றப்பட்டு, வேறுபட்ட மரபுகளும் பண்பாடும், கலாசாரமும் கொண்ட மிகப் பல தேசங்களின் இயங்குதளமாக உலகம் மாற்றப்பட்டு விட்டது. இந்த நூற்றாண்டு புதிய தேசங்களினதும், தேச அரசுகளினதும் தோற்றத்திற்கான, காலச் சாட்சியாக அமைந்திருக்கின்றது. சுருக்கமாக கூறினால், இந்த நூற்றாண்டு, *தேசங்களின் நூற்றாண்டு* எனவும் வரலாற்றில் பதியப்படும்.

அந்நிய ஆதிக்கத்தின் கீழ் - குறிப்பாக, நான்கு நூற்றாண்டுகளுகளின் சமூக இயக்கம் அமைதியாகவும், சீராகவும் அமைந்திருக்கவில்லை. மாறாக, இந்த ஐம்பதாண்டு காலத்தில், சிங்கள தேசம் சமூக கொந்தளிப்புகளையும், வன்முறை அரசியலின் அனுபவங்களையும் சந்தித்து வந்துள்ளது. பொருளாதார சீர்குலைவுகளும், அதிகரித்து செல்லும் தொழிலின்மையும், வாழ்க்கைத் தரத்தின் தொடர்ச்சியான வீழ்ச்சியையும், சமூக தேவையுடன் பொருந்தாத கல்விமுறையையும் சிங்கள மக்களில் மிகப் பெரும்பாலானோரை கடுமையாக பாதித்திருக்கின்றன. ஒருபுறம், மிகச்சிறு பிரிவினரின் கரங்களில் அதிகாரமும், செல்வமும் வரம்பற்று குவிந்திருக்கின்ற நிலையில், மறுபுறம் மிகப் பெரும்பான்மையானோர் வறுமையின் விளிம்பில், அடக்கப்பட்ட நிலையில் வாழ்கின்ற ஏற்றத்தாழ்வான நிலை துலக்கமாக தெரிகின்றது. தற்கொலை செய்து கொள்பவர்களின் எண்ணிக்கையிலும், மதுப் பழக்கத்திற்கு அடிமையாயிப்பவர்களின் அளவிலும் உலகிலே சிங்கள தேசம் முதலிடத்தில் இருப்பதும், ஆயிரக்கணக்கான சிறுவர்களை பாலியல் உழைப்பில் ஈடுபடுத்துகின்ற சமூகங்களில் ஒன்றாக சிங்கள சமூகம் மாறியிருப்பதும், சிங்கள மக்களிடையே நிலவுகின்ற பொருளாயத மற்றும் ஆன்மீக ரீதியான சீர்குலைவுகளை தெளிவாக சுட்டிக் காட்டுகின்றன. இரு தசாப்த காலத்திற்குள், ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் தமது உயிர்களை இழந்திருக்கிற இரு ஆயுதக் கிளர்ச்சிகள் வெடித்துக் கிளம்ப கூடியளவுக்கு, சிங்கள தேசத்திற்குள் தீவிர பகை முரண்பாடுகள் நிலவுகின்றன.

இவ்வாறு சிறிலங்கா அரசினதும், அதைக் கட்டுப்படுத்துகின்ற பிரிவினரதும் சுயநலமிக்க, சமூக விரோத செயற்பாடுகளின் காரணமாக, அவர்களுடன் சிங்கள மக்கள் ஆழமான முரண்பாட்டை கொண்டிருக்கிறார்கள். இருப்பினும், இது நாணயத்தின் ஒரு பக்கம்தான்.

சுதந்திரத்தின் பின்னரான சிறிலங்கா அரசின் உருவாக்கமும், அதன் நிறுவன இறுக்கமும், சிங்களமயமாகும் தன்மையை கொண்டிருந்தன. பாராளுமன்றத்தில் சிங்கள உறுப்பினர்களின் பெரும்பான்மை, மலையக தமிழர்களின் வாக்குரிமை (மற்றும் பிரஜாவுரிமை) பறிக்கப்பட்டமை, சிங்கள மொழியினதும், பௌத்த மதத்தினதும் அரசியலமைப்பு ரீதியான முதன்மை, நிர்வாக மற்றும் பாது காப்பு துறைகளில் சிங்கள ஆதிக்கம் . . . . என, சிறிலங்கா அரசின் சிங்களமயமாகும் போக்கு திட்டமிட்ட ரீதியிலும், உறுதியாகவும் முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கின்றது.

இந்த நிகழ்வுகள் வெறுமனே பாராளுமன்ற எல்லைக்குள் மட்டுப்படவில்லை. இவை பேரினவாத சித்தாந்தத்தில் தோய்ந்தும், தொடர்பூடகங்களின் முழுவீச்சான பிரச்சார பின்புலத்தினூடாகவும் சிங்கள மக்களின் நலன்களை எப்போதும் பாதுகாக்கும் என்று உறுதியுரைக்கப்பட்டன. அவ்வாறே சிங்களமக்களின் மத, கலாச்சார பண்பாட்டு மரபுகளை பேணி வளர்ப்பதில் சிறிலங்கா அரசு முழுவீச்சுடன் செயற்பட்டு வந்திருக்கின்றது. சிங்கள மக்களின் நில, கல்வி, வேலைவாய்ப்பு பிரச்சனைகளை தீர்ப்பதில் சிறிலங்கா அரசு முற்றிலும் சிங்கள அரசாகவே செயல்பட்டு வந்திருக்கின்றது. இவற்றின் விளைவாக, சிங்கள மக்கள் சிறிலங்கா அரசுடன் நெருக்கமாக பிணைக்கப்பட்டார்கள். அவர்கள், சிறிலங்கா அரசை தமது சொந்த தேச அரசாக உரிமை கொண்டார்கள்.

சிறிலங்கா அரசை கட்டுப்படுத்துவதில், தொழில்முறை அரசியல்வாதிகளும், பௌத்த மதபீடங்களைச் சேர்ந்தவர்களும் பிரதான இடத்தை வகிக்கிறார்கள் என்பது நாமறிந்ததே. சிறிலங்காவில் நடைமுறையிலுள்ள தேர்தல் முறையானது, பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பிரதிநிதிகளை கொண்டுள்ள கட்சி, அரசாங்கத்தை அமைக்கவும், அதனூடாக சிறிலங்கா அரசின் மீது குறிப்பிடத்தக்க வலுவுடன் கட்டுப்பாட்டை பேணுவதற்கும் வாய்ப்பளிக்கின்றது. அதனால் அரசாங்கத்தை அமைக்கின்ற எந்தவொரு கட்சியும், சிறிலங்கா அரசினூடான அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு, சிங்கள மக்களிடையே கணிசமான எண்ணிக்கையினரின் ஆதரவை பெற்றுக் கொள்வது சாத்தியமாகின்றது.

இவ்வாறு சிறிலங்கா அரசுக்கும், சிங்கள மக்களுக்கும் இடையே உறுதியான பிணைப்பு உருவாக்கப்பட்டிருக்கின்றது. இந்த பிணைப்பு இன்றுவரை பலவீனப் படுத்தப்படாமல் நீடிக்கின்றது. வறுமையும், வாழ்க்கை சுமைகளும் அதிகரிப்பதன் காரணமாகவோ, அரசு நிறுவனங்களில் இடம்பெறுகின்ற ஊழல் மற்றும் மோசடிகளாலோ சிங்கள மக்கள் மத்தியில் தோன்றுகின்ற எதிர்ப்புக்கள், ஆட்சியில் உள்ள அரசாங்கத்தை மாற்றுவது என்ற இலக்கு நோக்கி எழுச்சி கொள்கின்றனவே தவிர சிறிலங்கா அரச இயந்திரத்தை நோக்கி அல்ல. எந்தவொரு சிங்கள கட்சியும், சிறிலங்கா இராணுவத்திற்கு எதிராக கண்டனம் தெரிவிப்பதில்லை. ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் கொடுரமாக கொல்லப்பட்ட போது கூட, அதிகாரத்திலிருந்த அரசியல்வாதிகளுக்கும், கட்சிக்கும் எதிராகத்தான் உணர்வலைகள் குவிக்கப்பட்டனவே தவிர, அரச படைகளுக்கோ, அரசு என்ற நிறுவனத்திற்கோ எதிராக அல்ல.

இவ்விதம் சிங்கள மக்கள் சிறிலங்கா அரசை தமது சொந்த அரசாக கருதுவதால் இந்த அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக இங்குள்ள ஏனைய சமூகங்கள் செயற்படும்போது, அதை <u>தமக்கு எதிரானதாக</u> கருதுகின்ற மனோ பாவம் சிங்கள மக்களிடையே உருவாகியுள்ளது. இதன் விளைவாக இந்த அரசினால் இங்குள்ள ஏனைய சமூகங்கள் அடக்கப்படும் போது, அதை ஆதரிப்பவர்களாக அவர்கள் மாறுகின்றார்கள். குறிப்பாக ஈழத்தமிழர்களிற்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்ற யுத்தத்தை ஆதரிப்பதிலும், அதில் நேரடியாகவும், தார்மீக ரீதியாகவும் பங்கு கொள்வதிலும் சிங்கள மக்களிடையே உறுதியும் ஒருமைப்பாடும் காணப்படுகின்றது. இவ்வாறு பேரினவாதத்தை பாதுகாக்கும் சக்திகளாக -பேரினவாதத்திற்கு வெகுஜனத் தளத்தை வழங்குபவர்களாக சிங்கள மக்கள் மாறியுள்ளனர்.

ஒவ்வொரு சமூகமும் தான் தேர்வு செய்கின்ற பாதையில், தனக்கேயுரிய தனித்துவமான பண்புகளுடன் இயங்குவதற்கான உரிமையைக் கொண்டிருக்கின்றது. இந்த வகையில், சிறிலங்கா அரசுடன் சிங்கள மக்கள் கொண்டுள்ள உறவை மதிப்பதும், புரிந்து ஏற்றுக் கொள்வதும் இன்னொரு தேசம் என்றவகையில் எமது கடமையாகின்றது. எனினும் இந்தப் புரிதல், சிங்கள சமூகம் இங்குள்ள பிற சமூகங்கள் மீது ஆதிக்கம்

(தொடர்ச்சி 7ம் பக்கத்தில்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மலையக தமிழ் தேசமும் சுயநிர்ணய உரிமையும் !

தேசமாக மக்கள் தம்மை ஒருங்கிணைப்பது என்பது அம்மக்கள் திரளின் அரசியல் வரலாற்று வழிப்பட்ட நிகழ்வுப்போக்காகும். மலையகத்தமிழரது அரசியல்வரலாறானது செழுமையானதும் வீரமிக்கதுமான போராட்டத்துடன் கூடியதாகும். இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் உருப்பெற்ற மிகப் பலமான தொழிற் சங்கங்கள் மலையகத் தமிழரை மையமாகக் கொண்டவையாகும். ஆதிக்கப் பிரிவுகளை அதிர்ச்சிக்குள்ளாக்கும் வகையில் இடதுசாரிகளைப் பலப்படுத்தி பாராளுமன்றத்தில் 7ஆசனங்கள் இடதுசாரிகளுக்குக் கிடைக்கக் காரணமாயமைந்தது மலையகத் தமிழரின் வாக்குப் பலம்தான். இதன் காரணமாக சிங்கள சோவுனிச - முதலாளித்துவ அரசியல் தலைமையின் பழிவாங்கலுக்குள்ளாகி தமது அடிப்படை உரிமையான பிரஜாவுரிமையை கூட்டாக இழந்த தேசமாக மலையகத் தமிழர் ஆக்கப்பட்டனர். அந்நிலையிலும் தமது போர்க்குணாம்சத்தை இழக்காது அதற்கெதிராக தொடர் போராட்டங்கள் நிகழ்த்தியவர்கள். தனிச்சிங்களச் சட்டம் அமுலாக்கப்பட்ட போது அதை எதிர்த்து மலையகமெங்கும் தமிழ்மொழியுரிமைக்காகப் போராட்டங்களை நடத்தி தமது மொழியுரிமையைப் பாதுகாத்திட எழுச்சி கொண்டவர்கள்..... இவ்வாறு மலையகத் தமிழரின் அரசியல் போராட்ட வரலாறு இன்று வரையிலும் தொடர்கிறது.

தமக்கேயான பொதுவான வரலாற்று அனுபவங்களை - கூடவே வரலாற்றுத் துயரங்களைக் கொண்ட மக்கள் தமது பொதுவான அனுபவங்கள் - துயரங்கள் மற்றும் சாதனைகளினூடாக தமக்கிடையேயான பொது ஒற்றுமையை இனங்காண்கின்றனர். இந்தப் பொது உணர்வுதான் அம்மக்கள் தம்மை தேசமாக ஒருங்கிணைக்கும் அரசியல் விழிப்புணர்வுப் புள்ளியாய் உள்ளது. தமிழகத்தின் தென் மாவட்டங்களிலிருந்து உழைப்பிற்காக கொலனித்துவவாதிகளால் கடல் கடந்து அழைத்துவரப்பட்ட மக்கள் இலங்கையின் மத்திய மலைநாட்டில்குடியமர்த்தப்பட்டனர். தமது கைகளின் பலத்தால் காடுகளை அழித்து மலைகளில்பயிர் விளைவித்தனர். உழைப்பின்மூலம் கிடைத்த ஆளுமையில் தமது உரிமைகளை மேலும் உறுதிப் படுத்திக்கொள்ள முயன்ற போது பிரஜாவுரிமை பறிக்கப்பட்டனர். அரசியல் ஒப்பந்தங்களின் மூலம் பலவந்தமாக நாடு கடத்தப்பட்டனர். உறவுகள் துண்டாடப்படுதல், உளவியல் துயரம், கடின உழைப்பு, வறுமை, பேரினவாத அடக்குமுறை, உயிர்வாழ்வுமீதான அச்சுறுத்தல்.. . . யாவும் மலையகத் தமிழரின் பொது அனுபவமாக - பொதுத் துயரமாக இம்மக்களுக்குள் படிந்துள்ளது. இப்பொதுவான வரலாற்று உணர்வுதான் மலையகத் தமிழரின் தேசிய விழிப்புணர்வுப் புள்ளி. 60களின் பிற்பகுதியில் உருப்பெற்ற மலையகத் தமிழர் எனும் கருத்தாக்கம் மலையகத் தமிழர் தம் தேசிய விழிப்புணர்வின் வெளிப்பாடேயாகும்.

தேசத்தின் பெருமளவு மக்கள் பிரிவினரை தொழிலாளப் பிரிவினராகக் கொண்டிருப்பது இத்தேசத்திற்கேயுரிய நேர்மறைத் தனித்துவமாகும். தொழிலாளவர்க்கத்தின் தலைமையில் தேசம் தன்னை ஒருங்கிணைக்கும் - தனது தேசிய அடையாளத்தை உருவகப்படுத்தும் பண்பானது பொதுவில் தேசிய உருவாக்கங்களில் மிகவும் அரிதாகக் காணப்படுவதாகும். மலையகத் தமிழர் தேசிய உருவாக்கத்தில் இப்பண்பு வெளிப்படையாகக் காணப்படுகிறது. அத்துடன் இத்தேச மக்களில் பெரும்பான்மையானவர்கள் தம்மை எப்பொழுதும் ஸ்தாபன வடிவத்திற்குள் வைத்திருப்பது இத்தேசத்தின் இன்னுமொரு விசேஷத்துவமாகும்.

எனினும் மலையகத்தமிழர் தம்மை ஒரு தேசமாக முதன்மைப்படுத்தி தமது தேசிய இயக்கத்தை முன்னெடுப்பதற்கான வாய்ப்புகள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டேயுள்ளன. மலையகத் தமிழரின் தேசிய அரசியல் எழுச்சியை அடக்கும் காரணிகளாக பின்வருபவை அமைந்துள்ளன.

1. அரச இயந்திரம் : சிங்கள சோவுனிச அரசானது மலையகத்தமிழரின் அரசியல் பலத்தையும் தேச உருவாக்கத்தையும் மழுங்கடிக்கும் வகையில் மலையகத்தில் திட்டமிட்ட குடியேற்றங்களை மேற்கொண்டு வருகிறது. இது மலையகத் தமிழரின் சமூக - கலாச்சார வாழ்வு, பாதுகாப்புணர்வு, அரசியல் செயற்பாடு மற்றும் மக்கள் மத்தியில் நிலவும் தமக்கிடையிலான உள்நோக்கிய உறவு (தேசிய வாழ்வு) ஆகியவற்றை சிதைப்பதாயுள்ளது. அத்துடன் அனைத்துவிதமான வன்முறைகளையும் - தொடர்ச்சியான கண்காணிப்பு, கைதுகள், துன்புறுத்தல்கள் - தனது அதிகார நிறுவனங்களுக்கூடாக பிரயோகிப்பதன் மூலம் மலையக தமிழரை எந்நேரமும் தமது உயிர்வாழ்வு பற்றிய அச்ச உணர்விற்கு சிங்கள அரசு தள்ளிவிட்டுள்ளது.

2. தோட்ட நிர்வாகம் : 90களின் பின் தோட்டங்களை பொறுப்பேற்ற தனியார் தோட்ட முகாமைத்துவங்கள் தமது லாப நோக்கத்தை இலக்காகக் கொண்டு மிகவும் இறுக்கமான விதிமுறைகளை தோட்டங்களில் அமுல்படுத்தி வருகின்றன. தோட்ட நிர்வாகத்தினால் முன்னெப்போதையும் இல்லாதவாறு தோட்டங்களில் வாழும் மலையகத் தமிழர் மீதான கண்காணிப்பு தீவிரமடைந்துள்ளது. மக்கள் தோட்டத்தை விட்டு வெளியே செல்வது மற்றும் தோட்டத்திற்குள் புதியவர்கள் (உறவினர்) வருவது யாவும் நிர்வாகத்தின் கண்காணிப்புக் குள்ளாவதுடன் தோட்டத்திற்கு வரும் கடிதங்கள் கூட நிர்வாகத்தினால் உடைக்கப்படும் அளவுக்கு அடக்குமுறை நிலவுகிறது. நிர்வாகத்திற்கு சிறிது சந்தேகமேற்பட்டாலும் உடனேயே பொலிஸ் வரவழைக்கப்படுகிறது.

3. தொழிற்சங்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகள் : மலையகத் தமிழரது சமூக மற்றும் அரசியல் வாழ்வில் மாற்றங்கள் ஏற்படாது இருப்பதில் மிகவும் அக்கறை கொண்டுள்ள இந்நிறுவனங்கள் மக்கள் மத்தியில் தொழிற்சங்க மற்றும் கட்சிசார் பிரிவினைகளை ஏற்படுத்தி மக்களை தமது செல்வாக்கின் கீழ் வைத்திருக்க தொடர்ந்தும் முயன்று வருகின்றன. மக்களுக்காக செயற்படுபவர்களைக் காட்டிக் கொடுப்பது, அடியாட்களை குண்டர்களை ஏவி மக்களின் சுயாதீனமான போராட்டங்களை நசுக்குவது. . போன்ற நடவடிக்கைகளால் மக்கள் சுயமான அரசியலில் ஈடுபடுவதை இவை தடுத்து வருகின்றன.

4. அரச சார்பற்ற நிறுவனங்கள் (என். ஜி. ஓ.): தனது செயற்பாட்டு எல்லைக்குட்பட்ட மக்களது அரசியல் வாழ்வு மீது அரச சார்பற்ற நிறுவனங்கள் பெரிதும் செல்வாக்கு செலுத்துகின்றன. மக்களை சமூக சீர்திருத்த நடவடிக்கைகளுடன் கட்டிப் போடுவதன் மூலம் மக்கள் அரசியல்போராட்டங்களில் ஈடுபடாதவாறு அரசியல் நீக்கம் செய்கின்றன. குறிப்பாக மலையகத்தின் கல்விகற்ற இளம் சக்திகள் இன்று அரச சார்பற்ற நிறுவனங்களின் கருத்துக்களுக்கு உட்பட்டு வருவதன் மூலம் தமது தேசிய அரசியல் பற்றிய பிரக்ஞையை பெறுவதிலிருந்து தூரமாக்கப்பட்டு வருகின்றனர்.

மலையகத் தமிழரை தொடர்ந்தும் நவீன அடிமைகளாக வைத்திருப்பதில் அரச இயந்திரம், தோட்ட நிர்வாகம், தொழிற்சங்கங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகிய இந்நான்கு காரணிகளும் பரஸ்பரம் இணைந்து செயற்படுகின்றன.

இவற்றுடன் மலையக சமூகத்தில் காணப்படும் ஒப்பீட்டளவில் இறுக்கமான சாதிய முறைமையும் மக்கள் தமக்கான தேச அரசியலை முன்னெடுப்பதற்கு தடையாயுள்ளது. இதில் சாதிய பிரமுகர்களின் எதிர்மறைப்பாத்திரம் குறிப்பிடத்தக்கது.

மலையகத் தமிழர் தேசிய அரசியல் எழுச்சிக்கு முட்டுக்கட்டை போடும் காரணிகளையெல்லாம் கடந்து சிங்களப் பேரினவாதத்தால் தாம் அடக்கப்பட்டு வருவது தொடர்பான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் அதிகரித்து வருகிறது. பேரினவாத அடக்குமுறைக்கெதிராக ஆங்காங்கு தன்னியல்பான போராட்டங்கள் வளர்ச்சி பெற்று வருகின்றன. இவை மலையகத் தமிழரின் தேசிய எதிர்காலம் பற்றி நேர்மறை அர்த்தத்தில் கட்டியம் கூறுவனவாயுள்ளன.

நம்மைப் பொறுத்தவரையில், தமது

(தொடர்ச்சி 7ம் பக்கத்தில்)

## குகைகள்

அவர்களின் மனிதத்
தன்மையற்ற
அராஜகங்கள்
என் இதயப்பாறையில்
குகைகளைக்
குடைந்துவிட்டன.
மாறும் சூழ்நிலையில்
கண்கள் பதித்து,
இந்தக் காட்டில் நான்,
எச்சரிக்கையோடு நடக்க
வேண்டும்.

இப்போது காலம் மாறிவிட்டது,
இங்கும் அங்கும்
எதிர்ப்புகள் வெடிக்கின்றன.

நல்லது கெட்டது பற்றிய
குரலைக் கவனித்தபடி நான்
இவ்வளவு நாட்கள்
அமைதியாக இருந்தேன்.

ஆனால், இப்போது
மனித உரிமைகளுக்காக
நான் நெருப்பை விசிறிடுவேன்.

என்றைக்குமே தாயாக இல்லாத
-
கேவலம், பூனைக்கும்
நாய்க்குமான
வாழ்வைக் கூட நமக்குத் தராத
இந்த இடத்திற்கு -
இந்த நிலத்திற்கு -
நாம் எப்படி வந்து சேர்ந்தோம்?
அவர்களின் மன்னிக்க முடியாத
பாவங்களை சாட்சியாக
வைத்து
இதோ! இங்கேயே, இப்போதே
நான்
ஒரு கலகக்காரனாக
மாறுகிறேன்!

- ஜோதிலஞ்சேவர்

தமிழில்: இரா. விசயகுமார்,
நன்றி: தலித் இலக்கியம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சிங்களத்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்த முடியும் என்பதையோ, இந்த சமூகங்கள் தமக்குரிய பாதைகளில் இயங்குவதை தடுக்கலாம் என்பதையோ குறிக்காது. தனக்குரிய வழியில் இயங்குவதற்கு, சிங்கள சமூகம் எத்தகைய உரிமையைக் கொண்டிருக்கின்றதோ அதே உரிமையை இங்குள்ள ஏனைய சமூகங்களும் கொண்டிருக்கின்றன என்பதே இங்கு உள்ளார்ந்துள்ள தர்க்கமாகும்.

சிங்கள மக்கள் மத்தியில், சமூக அளவில் படிந்துள்ள இதகைய இனப்பகைமையும் ஆதிக்க உணர்வும் எளிதில் அகற்றப் படக் கூடியவை அல்ல. உலகளவில் தாம் சிறுபான்மையி னர் என்றும் தனக்கு வேறு இடம் இல்லை என்றும் அச்சப்படுத்தப் பட்டும் தமது வறுமைக்கும், துயரங்களுக்கும் இங்குள்ள ஏனைய சமூகங்களே காரணம் என்று பகைமையூட்டப்பட்டும் இருக்கின்ற நிலையில் இந்த சமூகங்கள் தொடர்பாக, சிங்கள மக்கள் மத்தியில், உடனடியாக அரசியல் ரீதியில் முற்போக்கான பிரதிபலிப்புகள் வெளிப்படும் என்று எதிர்பார்ப்பது அரசியல் விவேகமின்மையையே குறிக்கும்.

இன்று இங்கு ஈழத்தமிழர்கள் முஸ்லீம்கள் மற்றும் மலையக தமிழர்கள், தனித்தனி தேசங்களாக உருப்பெற்றிருப்பதற்கு சிங்கள தேசத்திடம் வெளிப்படுகின்ற இனவெறுப்பும், ஆதிக்க உணர்வுகளுமே அடிப்படை காரணம். கடந்த அரை நூற்றாண்டு கால இலங்கையின் அரசியல் வரலாறானது, இனங்களுக்கிடையேயான வன்முறை மோதல்களையும், இங்குள்ள பிரதான சமூகங்கள் தனித்தனி தேசங்களாக உருப்பெற்று வந்திருப்பதையும், தமக்கென தனியான அரசை அல்லது அரசியல் அதிகாரங்களை பெறுவதை நோக்கி மேலும் மேலும் முன்செல்வதையும் பதிவு செய்துள்ள வரலாறாகவே அமைந்திருக்கின்றது.

நீடிக்கும் யுத்தத்தின் அழிவுகளிலிருந்து வாழ்க்கைச் சுமைகளிலிருந்தும் மீண்டுகொள்வது என்பது இங்குள்ள சமூகங்கள் தமது அரசியல் உரிமைகளை, தமக்குரிய விதத்தில் அனுபவிக்க கூடிய சூழல் உருவாக்கப்படுவதிலேயே தங்கியிருக்கின்றது. அப்போது இங்குள்ள சமூகங்கள் தனியான தேசங்கள் என்ற புதிய பரிமாணத்துடன் உயிர்த்தெழும்! அவை சகதேசங்கள் என்ற அரசியல் அடையாளத்துடன் தமக்கிடையே சமத்துவ உறவுகளை கட்டியெழுப்புகின்ற உன்னத நிலை உருவாகும்! அப்போது, பல்கலாச்சார, பல்லின, பல்தேச இருப்பு உறுதியாக்கப் பட்டுள்ள புவிப்பரப்பில், சிங்கள தேசத்துடன், ஈழத்தமிழர்களும் முஸ்லீம்களும் மலையகத் தமிழர்களும் தமது தனித்துவங்களை அழுத்தமாய் பதிப்பார்கள்!

## சமகால...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இனவாத செயற்பாடுகளையும், இன்னமும் ஒற்றையாட்சி பற்றி பேசிக்கொண்டிருப்பதையும் மறைத்து, சந்திரிக்கா எதிர்ப்புக் காரணமாக தமிழரின் வாக்குகளை பெற்றுவிடலாம் என கற்பனையில் உள்ளது. அன்று 5 வருடங்கள் எம்மீது பொருளாதார தடைவிதித்தும் கூட்டாகத் தண்டித்தும், தொடர்ச்சியான இனஅழிப்பு மேற்கொண்டும் வந்தது. அவர்களைப் பொறுத்த வரையில வெறும் சம்பவங்கள் தான்.

80 களில் இருந்து இன்று வரை, சிங்கள தலைமையின் ஒரு தரப்பின் வெற்றியை தீர்மானிப்பதாக, எமது குறிப்பிட்ட வாக்குகள் அமைந்திருந்தன. அவர்கள் தமது ஆட்சியை தொடர்வதற்கும், அதிகார யந்திரங்களை கொண்டு எம்மை நசுக்குவ தற்கும் எமது ஆதரவுகளை இதுவரை மாறிமாறிப் பயன்படுத்திக்கொண்டனர். இக்காலங்களில் நாம் பெற்றுக்கொண்ட கசப்பான பாடங்களும், பின்னர் விடுதலைப் போராட்டம் பெற்ற குறிப்பிடத்தக்க தொடர்ச்சியான வெற்றிகளும் தற்போது அவர்களின் தோல்வியை நிர்ணயிக்க கூடியதாக எமது ஒற்றுமையை பலப்படுத் தியுள்ளது. இப்போது எமது எதிர்காலத்தை மட்டுமல்ல, அவர்களது வெற்றி தோல்விகளையும் நிர்ணயிக்கும் சக்தியாக நமது ஒருமைப் பாடு மாறி வருகின்றது.

நமது தேசம் கருத்து ரீதியில் காத்திரமான பாத்திரத்தை ஆற்றும் இடத்தை இப்போது வந்தடைந்து விட்டது. இந்த கருத்துதொற்றுமையை நடைமுறை யில் அரசியல் ஒற்றுமையாக, வெற்றிகரமாக பிரயோகிக்க விதத்தில் தமிழ் தேசத்தின் பொது நிகழ்ச்சிநிரலின் கீழ் அனைவரும் செயற்படக்கூடியதாக எமது சக்திகளை குவிக்க வேண்டும். தற்போது ஒன்றன்பின் ஒன்றாக நம்முன் நிகழ்ந்து கொண்டிருக்கும் உலக நிகழ்வுகள் இதனையே நிரூபித்த வண்ணம் உள்ளன. அரசியல் குத்தகை மனோபாவத்தில் இருந்து விடுபட்டு, அனைத்து தேசியசக்திகளையும் ஒன்று குவித்து தாக்கத்தை நிகழ்த்துவதை நோக்கி நமது கவனத்தை குவிக்க வேண்டும் என தமிழீழ மக்கள் கட்சி அறைகூவல் செய்கின்றது.

தற்போது நமது தேசத்துக்குள் நிலவும் ஏனைய அரசியல் கருத்து வேறுபாடுகளை தேச நலனில் நின்று தீர்த்துக்கொள்ள காலம் தேவைப்படுகின்றது என்ற யதார்த்தத்தை ஏற்றுக் கொண்டு, எதிரிகள் குறித்து தற்போது நாம் வந்தடைந்துள்ள ஒருமித்த கருத்தை வெற்றிகரமாக செயற்படுத்தவும், இதனூடாக எமது இலக்கை மிகவிரைவில் சாத்தியமாக்கும் விதத்திலும் எமது தேசிய ஒற்றுமையை வெளிப்படுத்த வேண்டும்.

இப்படியான தேர்தல்களை பயன்படுத்தி எமது தேசியவிடுதலைக்கான முழக்கத்தை ஏகோபித்து பிரகடனம் செய்வதாயினும் சரி, அல்லது எமது இறுதி வெற்றியை சாத்தியமாக்கும் விதத்தில் சிங்கள் ஆட்சி பீடங்களை சிதைப்பது, அவர்களுக்குள் காணப்படும் முரண்பாடுகளை பயன்படுத்துவதாயினும் சரி, நாம் சரியான தருணத்தில், மிகவும் தெளிவான அரசியல் முடிவுகளை எடுத்து காத்திரமான தாக்கத்தை நாம் நிகழ்த்த வேண்டும். இதற்காக நமது தேசத்திலுள்ள தேசபக்த சக்திகள் தமக்குள் ஒரு நிகழ்ச்சி நிரலை உருவாக்கி நெருங்கிப்பேச ஒரு நேர்மையான அரங்கை உருவாக்குவது நோக்கியும் முன்னேற வேண்டும். தற்போது நமது தேசத்திலிருந்து வெளிப்படும், தன்னியல்பானதும் பிரக்ஞைபூர்வமானதுமான நிகழ்வுகள் இதனையே வலியுறுத்துகின்றன. அவரவர் தனித்துவங்களுடன் இந்த அரசியல் பொதுமேடையை உருவாக்க நேர்மையாக உழைப்போம், இப்போதிருந்தே இதனை தொடக்குவோம்!

## மலையகத்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் இருப்பை - எதிர்காலத்தை தீர்மானித்திடும் உரிமை பெற்ற அரசியல் சமூகமாக - தேசமாக மலையகத் தமிழர் உள்ளனர். சிங்கள சோவுனிச அரசின் அடக்குமுறைகளுக் கெதிராக தமது உரிமைகளை தாம் எவ்வாறு நிலைநாட்டப் போகின்றனர் என்பதைத் தீர்மானித்திடும் உரிமை இவர்களையேச் சாரும். சுயாதீனமான மலையக பிரதேச சுயாட்சியா? சிங்கள அரசுடன் உடன்படிக்கை செய்து கொண்டு கூட்டரசாங்கம் அமைப்பதா? அல்லது மலையகத் தமிழர் செறிவாக வாழும் பிரதேசங்களை நோக்கி மொத்த மலையகத் தமிழரும் நகர்ந்து செறிவான சனத்தொகை பரம்பலை ஏற்படுத்துவதன் மூலம் தமது பாதுகாப்பை உத்தரவாதப் படுத்திக் கொள்வதுடன் தமக்கான தொடர் நிலப்பரப்பை ஏற்படுத்திக் கொண்டு மலையகத் தனியரசை பிரகடனம் செய்வதா? என்பது யாவும் மலையக தேசத்தின் அரசியல் எதிர்காலம் சார்ந்தவையாகும். இத் தேசத்தின் தேசிய தேவைகள், அரசியல் ஆளுமை, போராட்ட பலம் என்பவற்றால் இவை தீர்மானிக்கப்படும். இத்தீர்மானங்கள் எதுவும் மலையகத் தமிழ் தேசத்தின் சுதந்திரமான தேசம் சார்ந்த முடிவுகளாயிருக்க வேண்டுமேயன்றி இம்மக்களின் சுயநிர்ணய உரிமையில் தலையீடு செய்யவும், அரசியல் கையாள்கை (manipulation) செய்யவும் எந்த சக்திக்கும் உரிமையில்லை.

மலையகத் தமிழரின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு தமிழீழ மக்கள் கட்சி அனைத்து விதமான ஒத்துழைப்புகளையும் வழங்குவதை தனது கடமையாகக் காண்கிறது.

## மக்கள் களம்

1) சிங்கள மக்கள் படுகொலை செய்யப்பட்டது குறித்தும், முஸ்லீம் மக்கள் வெளியேற்றப்பட்டது குறித்தும் வன்னியிலிருந்து சிங்கள இராணுவம் வெளியேற்ற பட்டது குறித்தும் தமிழீழத்தில் வந்திருந்த ஆக்கங்கள் தமிழீழ மக்கள் கட்சி தமிழ் மக்களின் விடுதலை என்கிற இலக்கிலிருந்தே விடயங்களை ஆராய்கிறது என்பதை கோடிட்டு காட்டியிருக்கிறது. வன்னியில் அடையப்பெற்ற இராணுவ வெற்றி தமிழ் சூழலில் இன்று நிலவும் பாசிச போக்கை அப்படியே பேணவும் மக்களின் ஜனநாயக உரிமைகள் தொடர்ந்தும் மறுக்கப்படவுமான சந்தர்ப்பத்தை வழங்கி விடுகிறது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும் தேச விடுதலை போராட்டத்தில் நிலவும் மக்கள் விரோத போக்குகளால் அதிருப்தியுற்றிருக்கும் பிரிவினரை புலிகளை நோக்கி தள்ளிவிடும் கைங்கரியத்தை செய்வதன் மூலம் ஜனநாயக, மக்கள் விரோத போக்குகளுக்கு முடிவு கட்டுவதற்கான முயற்சிகளுக்கு பாதகம் ஏற்படும் என்பதையும் கவனத்தில் கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டிருப்பின் கட்டுரை முழுமையடைந்திருக்கும்.

மாதவன்

வண்டன்

2. இறுதி இலக்கை அடைவதற்கு வன்னியிலிருந்து இராணுவத்தை வெளியேற்றுவது ஒருபடியென நீங்கள் கருதியிருந்தது போல தமிழீழத்தின் முன்பக்க செய்தி அமைந்திருந்தது. வன்னியில் அரசின் பொருளாதார தடைக்குள்ளும் இராணுவ நெருக்குதல்களுக்குள்ளும் சாதாரண தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். மறுபுறம் இலங்கை அரசினால் அனுப்படும் உணவு பொருட்களோ மருந்துகளோ மக்களின் தேவைகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் சொற்பமே. இந்த சொற்ப பொருட்களிலும் ஒரு பகுதியை புலிகள் பறித்து கொள்வதும் அவற்றை மீளப்பெற வேண்டுமாயின் தங்களுக்கு அவ்வவ் குடும்பங்களிலிருந்து ஒருவர் பணிபுரிய வேண்டுமென வலியுறுத்தியும் வந்திருக்கிறார்கள். பொதுவாகவே அந்திய இராணுவம் வெளியேற்றப்பட வேண்டுமென்ற ஆர்வம் தமிழ் மக்களிடமிருந்தாலும் மேலே கூறப்பட்ட கட்டாய வேலைமுறைமை குறித்து எவ்வித அக்கறையையும் அச்செய்தியில் காண முடியவில்லை.

சிறி

லண்டன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழீழம்

'The Editor'
BM Box 4002
London. WC1N 3XX
United Kingdom

www.thamileelam.org
temk@temk.freeserve.co.uk

# 21ம் நூற்றாண்டு: தேசியவிடுதலையின் நூற்றாண்டு, நமது நூற்றாண்டு

இன அழிப்பையும் அடக்குமுறைகளையும் நடைமுறைப்படுத்திற்கொண்டு சமத்துவம், ஜனநாயகம், சமாதானம் பற்றிப் பேசுகின்ற அபத்தங்களுக்கு, வருகின்ற நூற்றாண்டில் நிச்சயம் முடிவு கட்டப்படும். தென்னாபிரிக்கப் விடுதலைப் போராளி மண்டேலா கூறுவது போல, அது ஜுமக்களின் நூற்றாண்டாக மலரட்டும்ஜி!

இன்று உலகளவில் நடைபெறும் பெரும்பாலான போராட்டங்கள், குறிப்பாக தேசியஅடக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்களாகவே உள்ளன. இந்த நூற்றாண்டின் இறுதிக்கட்டத்தில், இப்படியான பல போராட்டங்கள் முடிவிற்கு கொண்டு வரப்படுவதற்கான எத்தனங்கள், மட்டுப்படுத்தல்கள் இருந்த போதிலும், நம் கண்முன் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. போராட்டங்களில் சில போராடிய மக்களின் தரப்பில் வெற்றிகரமாக முடிவிற்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றன. புதிய இளம் தேச அரசுகள் உயிர்ப்படைந்து உலக வரைபடத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்த யதார்த்தங்கள் காலங்காலமாக, தேசஅரசுகள் அமைப்பதற்கு கூறப்பட்ட பல வரைவிலக்கணங்களையும் தகர்த்து, நிருபணங்களைத் தந்து கொண்டிருக்கின்றன.

பிறக்கவிருக்கும் நூற்றாண்டு பல தேசங்களின் விடுதலைக்கான நூற்றாண்டு. இந்த வரிசையில் எமது தேசத்தின் விடுதலையும், நூற்றாண்டிய முற்பகுதியில் சாத்தியமாக்க வேண்டிய கடமை நம் முன் உள்ளது. எல்லா அடக்குமுறையாளர்களையும் போல, சிங்கள ஆதிக்க சக்திகளும் வரலாற்றில் இருந்து தாமாக பாடம் கற்றுக் கொள்ளப் போவதில்லை. மிகுந்த விலை கொடுத்தேனும் வரலாறு பின்னோக்கி திரும்புவதில்லை என்ற பாடத்தை, அவர்களுக்கு கற்பிக்க வேண்டிய பொறுப்பு நமது தோள்களில் சுமத்தப்பட்டுள்ளது.

நமது நீண்ட போராட்டத்தினூடாக பல படிப்பினைகளை நாம் பெற்றுக்கொண்டுள்ளோம். இருந்தும் முக்கியமான ஒரு விடயத்தை கற்றுக் கொள்வதில் தொடர்ந்தும் தவறிழைத்து வருகின்றோம். நேரடியாக மக்களின் பலத்தில் எமது போராட்டத்தை கட்டியெழுப்புவதில் நாம் இன்னும் அதிக தூரம் செல்ல வேண்டியவர்களாக உள்ளோம். அண்மைக்காலத்தில் விடுதலைப்புலிகள் அடைந்த வெற்றிகள் எமது தேசத்தின் இலக்கு நோக்கிய ஒரு பகுதி நிருபணமாக மட்டுமே உள்ளது. பல்வேறு சமூக சக்திகளும் இணைந்த ஒரு மக்கள் போராட்டமாக எமது போராட்டத்தை மாற்றம் செய்வதற்கு பல அடிப்படை மாற்றங்களை எமது விடுதலைப்போராட்டம் வேண்டி நிற்கின்றது. இருப்பினும், புறந்தள்ளமுடியாத காரணிகளின் அழுத்தத்தினால், சில பண்புரீதியான மாற்றங்களை, இதற்கான அறிகுறிகளாக் நாம் காண்கின்றோம்.

தற்போது நடைபெறவுள்ள தேர்தலை அணுகுவதில் ஈழத்தமிழரின் பல்வேறு தரப்புகள் மத்தியிலும் ஒருமைப்பாடு ஏற்பட்டுள்ளது ஒரு நேரடியான சான்றாகும். பல தற்செயல் நிகழ்வுகளுக்கூடாகவேனும், மக்களின் உள்ளார்ந்த அரசியல் தேவை மேலெழுந்து வரும். அதனை பற்றிப்பிடித்து பலப்படுத்தி அடுத்த கட்டத்திற்கு போராட்டத்தை வளர்த்து செல்ல வேண்டியது புரட்சியாளரது கடமையாகும். மக்களின் உண்மையான அரசியல் விருப்பு என்ன என்பதை பல்வேறு அழுத்தங்கள் மூலம் வெளிப்படுத்தும் போது அதற்கு சரியான வடிவம் கொடுக்க வேண்டியதும் போராட்டத்தலைமைகளின் கடமையாகும். வெறும் இராணுவ வெற்றிகளில் திளைத்திருப்பது விடுதலைப்புலிகளாயினும் சரி, அந்த வெற்றிகளால் பெருமிதம் அடைந்துள்ள தேசமாயினும் சரி எவ்வளவு தவறான, மற்றும் ஆபத்தான இடத்திற்கு எம்மை கொண்டு சேர்க்கும் என்பதை எமது கடந்த காலமும், இது போன்ற பல போராட்ட வரலாறுகளும் காட்டியுள்ளன.

கடந்த காலங்களில், பல நல்ல புரட்சிகர கருத்துக்களும் புரட்சியாளர்களும் பின்னடைந்து மங்கி மறைந்து போனது ஏன் என்பதிலிருந்தும் நாம் கற்றுக்கொள்ள வேண்டும். ஒரு காலத்தில் ஏகபோக தலைமையாக இருந்தவர்கள் போராட்டத்தின் தேவையை கைவிடும் போது, அல்லது அதன் சரியான திசையை விட்டு விலகும் போது, காலாவாதியாகி போனது ஏன் என்ற கேள்வியிலிருந்து நாமும் கற்றுக்கொள்ள வேண்டும்.

சிங்கள அரசையும் அதன் தலைவர்களையும் இன்று நமது மக்கள் முற்றாகப் புறக்கணித்து விட்டனர். போராட்டம் வெற்றி பெறவும் சர்வதேச சூழல் சாதகமாகி வருவதையும் மக்கள் உணர்ந்து கொண்டுள்ளனர். அடுத்தது, எமது மக்களின் பங்கு பற்றுதலுடான விட்டுக்கொடாத, தொடர்ச்சியான போராட்டத்திற்கான அத்திவாரம், இப்போதே இடப்பட வேண்டும். இதற்கு எமது மக்களின் பரந்து பட்ட நலன்களை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய தேசபக்த மற்றும் போராட்ட சக்திகளின் பலமான இணைவை உருவாக்குவதை நோக்கியதாக, எமது நேர்மையான முயற்சிகள் இருக்க வேண்டும். மக்களையும், மக்களுக்காக போராடும் பல்வேறு சக்திகளையும் ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் ஒன்றிணைக்கும் இந்த வரலாற்று தேவையை நிறைவு செய்வதற்கு, போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களுக்கும் இதன்பால் அக்கறை கொண்டவர்களுக்கும் தலையாய கடமையாகும். இதற்கான முன்கையெடுப்புகளை செய்வதற்கு தமிழீழ மக்கள் கட்சி அடுத்த நூற்றாண்டில் தீவிர முயற்சிகளை மேற்கொள்ளும். இதுவே வரவிருக்கும் புதிய நூற்றாண்டை முன்னிட்டு, எம் தேசத்தின் முன் நாம் எடுக்கும் உறுதிமொழியாகும்.

## மலையகத்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்பதை உணர்ந்து கொண்ட அரசியல் உணர்வுடைய மக்களும், இளந்தலைமையின் பெரும்பாலானவர்களும் தமக்கு மாற்றுத் தலைமையாக மலையக மக்கள் முன்னணியை அவர்களை வரித்துக்கொண்டு, கடுமையான நெருக்கடிகளையும் அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டு ஒரு அரசியல் சக்தியாக மாற்றினர். இருந்தும் இதொக தொண்டமானை போல, இக்கட்சியும் சலுகை அளிக்கப்பட்டு இனவாத அரசினால் விலைக்கு வாங்கப்பட்டது இந்த மக்களுக்கு பெருத்த ஏமாற்றத்தை அளித்தது.

யூஎன்பி ஆட்சிக்காலத்தை விட சந்திரிக்காவின் ஆட்சிக்காலத்தில் தம்மீதான அடக்குமுறைகள் அதிகரித்ததுடன், மிக மோசமான அவமானங்களை சந்தித்தும் வந்தமையால் கடந்த 5 ஆண்டுகளுக்குள் நடந்த மாகாண, மற்றும் உள்ளூராட்சி தேர்தல்களில் இதொக வின் கோரிக்கைகளுக்கும் செவிசாய்க்காது மக்கள் சந்திரிக்கா அரசுக்கு எதிராக வாக்களித்தனர்.

இந்த யதார்த்தங்களை கருத்தில் கொண்ட சந்திரசேகரன் தனது பிரதி அமைச்சர் பதவியை துறந்து தற்போது யூஎன்பிக்கு ஆதரவாக செயற்படத்தொடங்கியுள்ளார். தம்மீது அடக்குமுறையை பிரயோகித்த ஒரு தரப்பிற்கு எதிராக வெளிப்பட்ட மக்களின் அரசியல் உணர்வலைகளை மற்றொரு தரப்பிற்கு ஆதரவென இந்த தலைவர்கள் மொழிபெயர்ப்பு செய்து கொண்டு, மறுபடியும் அதேவித விசச்சூழலுக்குள் சிக்கிக்கொள்கின்றனர். இவ்வாறான நிலை தொடருமெனில், நாளை வரும் தேர்தல்களில் வாக்களிக்கவே முடியாத அளவிற்கு மலையக தமிழர் சிதைக்கப்பட்டும் சிதறடிக்கப்பட்டும் போகும் போது, இந்த தலைவர்கள் தேர்தல் கேட்கவே தொகுதிகள் இல்லாமல் போகும் சாத்தியம் கணிசமாகவே உள்ளது.

மலைய தமிழர்களின் உண்மையான தேசிய அபிலாசைகளையும், அரசியல் உணர்வையும் அவர்கள் மீதான அடக்குமுறைகள் மற்றும் இனஅழிப்பின் உண்மையான பரிமாணத்தையும், அம்மக்களின் தலைவர்கள் என்று கூறிக் கொள்பவர்கள், சரியாக நாடிபிடித்தறிந்து, உடனடி மற்றும் நீண்ட கால அடிப்படையில் திட்டமிட்டு செயற்பட வேண்டும் என்பதையே அம்மக்கள் நாடி நிற்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்